செ.வெ.எண்: 587/2016 நாள்: 01.09.2016

# செய்தி குறிப்பு

2016-17 –ஆம் கல்வியாண்டில் முதலமாண்டு தொழிற்கல்வி பட்டப் படிப்புகளான பொறியியல், மருத்துவம், MBA, MCA, BEd போன்ற படிப்புகள் பயிலும் முன்னாள் படை வீரர்களின் சிறார்களுக்கு பாரத பிரதமரின் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை பெறுவதற்கான விண்ணப்பங்கள் www.ksb.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இக்கல்வி உதவித்தொகை பெற மேல்நிலைக் கல்வியில் 60 சதவீதத்திற்கு குறையாமல் மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும்.

இக்கல்வி உதவித்தொகை பெற தகுதி மற்றும் விருப்பமும் உள்ள முன்னாள் படை வீரர்கள் மற்றும் விதவைகள் முதற்கட்டமாக மேற்குறிப்பிட்டுள்ள இணையதளத்தில் தங்களது பெயர் (Registration) பதிவு மேற்கொண்டு தங்களுக்கான Password மின்னஞ்சல் மூலமாக பெறப்பட்டதும், கல்வி சலுகை பெற இதே இணையதளத்தில் உரிய தலைப்புகளின் கீழ் சான்றுகளுக்கான படிவங்களை பதிவிறக்கம் செய்து கல்விநிலையம், வங்கி மற்றும் இவ்வலுவலகத்திலிருந்து உரிய சான்று பெற்று தேவையான ஆவணங்களுடன் இணையதளத்தில் (upload) பதிவு மேற்கொண்டு அதன் நகல்களை உடனடியாக (மூன்று நாட்களுக்குள்) நாகர்கோவில் கோட்டாரில் (கம்போளம்) உள்ள மாவட்ட முன்னாள் படை வீரர் நல அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். இணையதளத்தில் இதற்கான கடைசி நாள்: 15.11.2016 பிற்பகல் 02.00 மணி வரை மட்டுமே.

இது தொடர்பான மேலும் விவரங்களுக்கு குமரி மாவட்ட முன்னாள் படை வீரர் நல அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட முன்னாள் படை வீரர் நல துணை இயக்குநர் மேஜர்(ஓய்வு)வா.ஸ்ரீ.ஜெயகுமார் தெரிவித்துள்ளார்.

துணை இயக்குநர்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.